SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்

பிப்ரவரி - 2019

# TNPSC ZERO CURRENT AFFAIRS PRELIMS

**0%** Effort | **100%** Results

www.tnpscthervupettagam.com

tnpscfeedback@shankarias.in

Available @Bookmark Store.

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy | Coimbatore | Namakkal.

# பிப்ரவரி - 2019

## *தமிழ்நாடு*

1. இரண்டு கடலோரக் காவல் மாவட்டங்களை (Coast Guard Districts) கொண்ட இந்தியாவின் முதலாவது மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. தூத்துக்குடி மற்றும் சென்னை ஆகியவை அவ்விரு மாவட்டங்களாகும்.

2. **டிஜிகாப் செயலி** : சென்னை காவல்துறை மற்றும் நடிகர் விஜய் சேதுபதி ஆகியோர் இணைந்து டிஜிகாப் என்ற கைபேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளனர். இதன் மூலம் திருடப்பட்ட இருசக்கர வாகனங்கள் மற்றும் கைபேசிகளைக் கண்காணிக்க முடியும். மேலும் அருகில் உள்ள காவல் நிலையம் பற்றியும் போக்குவரத்து எச்சரிக்கைகளை பற்றியும் பெறமுடியும்.

3. வேலூரைச் சேர்ந்த சினேகா பார்த்திபராஜா என்ற வழக்கறிஞர் “தான் எந்த சாதியையும் மதத்தையும் சார்ந்தவரல்ல” என்ற சான்றிதழ் பெற்ற முதல் இந்தியராவார்.

4. பிப்ரவரி 4, 2019 அன்று தமிழக அரசு "தமிழக சூரிய மின்சக்தி கொள்கை 2019" என்ற புதிய கொள்கையை வெளியிட்டது.

5. கால்நடை பராமரிப்பிற்காக தமிழக அரசால் விரைவில் "அம்மா ஆம்புலன்ஸ்" சேவை வழங்கப்படவுள்ளது.

6. மாநிலக் கூட்டுறவு நிறுவனமாக ஆவின் பால் தற்போது கத்தார் நாட்டிலும் விற்பனை செய்யப்படுகிறது.

7. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் முழு கிரீம் பால் (200 மி.லி) ரூபாய் 10-க்கு ஆவின் நிறுவனத்தால் விற்பனை செய்யப்படுகிறது.

8. இந்தியன் வங்கியின் உதவியின் மூலம் பல்லவன் கிராம வங்கி மற்றும் பாண்டியன் கிராம வங்கி ஆகியவை ஒன்றினைக்கப்பட்டு தமிழ்நாடு கிராம வங்கியாக உருவெடுத்துள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

9. 2019 பிப்ரவரி மாதம் 10-ஆம் தேதி வண்ணாரப்பேட்டையிலிருந்து AG-DMS செல்லும் சென்னை மெட்ரோ இரயில் செயல்படத் தொடங்கியது.

10. ஐக்கிய இராஜ்ஜியத்தை தலைமையிடமாகக் கொண்ட லாரேசி தானியங்கி நிறுவனமானது புதுச்சேரியில் நிறுவப்படவுள்ளது.

11. **ரோபோ படகு** : சென்னையிலுள்ள தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT) பெருங்கடல்களைப் பற்றி ஆய்வு செய்வதற்காக ரோபோ படகை உருவாக்கியுள்ளது.

12. சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கால்நடை பூங்கா நிறுவப்படப் போவதாக தமிழக முதல்வர் எடப்பாடி கே பழனிச்சாமி அறிவித்துள்ளார்.

13. பண்டிகூட் ரோபோ (Bandicoot Robot) என்னும் கழிவு நீர் சுத்திகரிக்கும் ரோபாவானது சென்னையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

14. 2019 பிப்ரவரி 14 அன்று தமிழக அரசால் ஒப்பந்த விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான மசோதா நிறைவேற்றப்பட்டது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

# தேசம்

1. **புல்வாமா தாக்குதல்:**
   - 2019 பிப்ரவரி 14 அன்று ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் புல்வாமா மாவட்டத்திலுள்ள அவந்திப்போரா என்ற இடத்தில் பாதுகாப்பு படைவீரர்கள் (சி.ஆர்.பி.எஃப்) மீது மிக மோசமான தாக்குதல் நடந்தது.
   - ஸ்ரீநகர் மற்றும் ஜம்முவை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை NH1 புல்வாமா வழியாகவே செல்கிறது.
   - ஜெய்ஷ்-இ-முகமது என்ற தீவிரவாத அமைப்பால் தாக்கப்பட்ட இத்தாக்குதலில் 44 சி.ஆர்.பி.எஃப் வீரர்கள் கொல்லப்பட்டனர்.
   - புல்வாமாவானது காஷ்மீரின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படுகிறது.

2. மத்திய அரசானது ஆந்திரப் பிரதேச மாநிலத்துக்காக தெற்கு கடற்கரை இரயில்வே மண்டலத்தை (Southern Coast Railway Zone) புதிதாக ஏற்படுத்தியுள்ளது. இதன் தலைமையகமானது விசாகப்பட்டினத்தில் அமைக்கப்பட உள்ளது.

3. 2025 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவில் காசநோய் ஒழிக்கப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4. மத்திய அரசானது தொழிற்துறை கொள்கை மற்றும் ஊக்குவிப்புத் துறையினை தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையென (Department for Promotion of Industry and Internal Trade) பெயர்மாற்றம் செய்துள்ளது.

5. கிராம உள்கட்டமைப்பு மற்றும் தேவையான வசதிகளை அளிப்பதற்காக சீர்மிகு கிராம பிரச்சாரம் என்ற ஊரக மேம்பாட்டுத் திட்ட த்திற்கு பஞ்சாப் அரசால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

6. பொதுமக்கள் ஆண்டு உ த்யனோத்சவ் கொண்டாபடுவதற்காக குடியரசுத் தலைவர் இராஷ்டிரபதி பவனை திறந்து வைத்தார்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

7. ஆந்திரப் பிரதேசத்திலுள்ள நெலப்பாடு எனும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆந்திரப் பிரதேச உயர்நீதி மன்றம் ஆனது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ரஞ்சன் கோகயால் திறந்து வைக்கப்பட்டது.

8. கிசான் கடன் அட்டையின் கீழ் விவசாயிகளின் நிதி சேர்ப்புக்கா ன பிரச்சாரம் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

9. மருந்து விலைக் கட்டுப்பாட்டு ஆணைகளின் கீழ் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மரு த்துவ உபகரணங்களின் விலைகளில் ஏற்படும் மீறல்களை கண்காணிப்பதற்காக “விலை கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ” அமைத்த முதல் மாநிலமாக கேரளா உள்ளது.

10. KP-BOT : கேரள காவல்துறையானது நாட்டிலேயே முதல் முறையாக மனித வடிவம் கொண்ட காவல் எந்திர மனிதனை (Humanoid Police Robot) வடிவமைத்துள்ளது.

11. **பூஜ்ஜிய இறப்புப் பாதை** : விபத்துகளின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கத்தில் டெல்லி அரசு பூஜ்ஜிய இறப்புப் பாதையை தொடங்கியுள்ளது.

12. ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிரிதி இராணியால் மும்பையில் இந்திய அளவுத் திட்டம் (இந்திய வரலாற்றில் முதல் வகை திட்டம் ) தொடங்கி வைக்கப்பட்டது.

13. கிரேட் இந்தியன் பஸ்டார்ட் (கானமயில்) எனும் பறவை யினை புலம்பெயர் உயிரினங்களின் பாதுகாப்பிற்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தத்தின் (UN - Convention on the conservation of Migratory Species - CMS COP 13) சின்னமாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

14. உத்தரகாண்டின் தெஹ்ரி மாவட்டத்தில் இமாலய மேக ஆய்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

15. இரயில்வே அமைச்சர் பியூஸ் கோயல், சர்வதேச ஆற்றல் முகமையினுடைய “எதிர்கால ரயில்வே” என்ற அறிக்கையை வெளியிட்டார்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

16. **சஹ்ரி சம்ரிதி உத்சவ்** : தீனதயாள் உபாத்யாய - தேசிய நகர் ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் வரம் பினை நீட்டிக்க வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தால் சஹரி சம் ரிதி உத்சவ் என்ற திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

17. சுவச் பாரத் திட்டமானது (கிராமின்) நாடெங்கிலும் உள்ள கிராமங்களின் திறந்த வெளிக் கழிப்பிடமில்லா நிலைப்பாட்டில் நிலைத் தன்மைக்காக "தர்வாசா குழு - பகுதி 2" என்ற பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளது.

18. ஜம்மு காஷ்மீர் அரசானது லடாக்கினை மாநிலத்தின் மூன்றாவது நிர்வாகப்பிரிவென்று அறிக்கை வெளியிட்டுள்ளது.

19. சுற்றுச்சூழல் அமைச்சகமானது குஜராத் அரசுடன் இணைந்து ஆசிய சிங்கங்களுக்கான மூன்று வருட பாதுகாப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

20. அருணாச்சல பிரதேசத்தில் "டிடி அருண்பிரபா" என்ற சேனல் பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்டது.

21. முன்னாள் சபாநாயகர் பு ர்னோ ஏ சங்மாவின் நினைவாக திக்கி பந்தி மைதானத்தின் பெயரை மாற்ற மேகாலய அமைச்ச ரவைக் குழு திட்டமிட்டுள்ளது.

22. இந்தியாவின் முதல் மாபெரும் நீர் உணவுப் பூங்கா ஆந்திரப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

23. இந்தியாவின் முதல் மாவட்ட கு ளிர்விப்பு அமைப்பு ஆந்திரப்பிரதேசத்தின் அமராவதியில் அமைக்கப்பட்டுள்ளது.

24. இந்தியாவில் முதன்முறையாக புவியியல் குறியீட்டிற்கான விற்பனைக் கூடமானது கோவாவில் உள்ள டாபோலிம் சர்வதேச விமான நிலையத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

25. தமிழ்நாடு உட்பட 16 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 112 என்னும் அவசர கால உதவி மைய எண்ணை (Helpline number 112) மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்தார்.

26. குமாட் என்ற இசைக்கருவி கோவாவி ன் பாரம்பரிய இசைக்கருவியென அறிவிக்கப்பட்டுள்ளது

27. பிப்ரவரி 12, 2019 அன்று இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் நினைவாக வாழ்க்கை அளவிலான ஓவியத்தினை திறந்து வைத்தார்.

28. குடும்பக்கட்டுப்பாட்டை பற்றிய விழிப்புணர்வை நகர் ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் ஏற்படுத்துவதற்காக உத்திரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் சார்தி சந்தேஷ் வாகினி வாகனங்களை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

29. கேரள அரசால் அம்மாநிலத்தை முதலீடுகளுக்கான முக்கிய தளமாக மாற்ற ASCEND 2019 என்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

30. பிரதமர் நரேந்திர மோடி அருணாச்சல் பிரதேசத்திலுள்ள சேலா கணவாயில் சேலா சுரங்கப் பாதை அமைப்பதற்கான அடிக்கல்லை நாட்டினார்.

31. ஸ்டார்ட் அப்களை ஊக்குவிப்பதற்காக பெண்கள் மற்றும் இளைஞர்கள் ஆகியோர் அரசின் மின்-சந்தை தளத்தில் (Government e Market place - Gem) அதிகளவில் மின் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்காக SWAYATT என்னும் முன்னெடுப்பானது தொடங்கப்பட்டுள்ளது.

32. தெலுங்கானா மாநில அரசானது நாராயண் பேட் மற்றும் முலுகு என்னும் இரண்டு புதிய மாவட்டங்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. தெலங்கானாவில் தற்போது 33 மாவட்டங்கள் உள்ளன.

33. இமாச்சலப் பிரதேச மாநில சட்டசபையானது சமஸ்கிருத மொழியை அம்மாநிலத்தின் இரண்டாவது அலுவல் மொழியாக அறிவிப்பதற்கான மசோதாவினை அறிமுகப்படுத்தியுள்ளது. ஹிந்தி மொழியானது அங்கு முதன்மையான அலுவல் மொழியாக உள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

34. மகாராஷ்டிர அரசானது வைரல் ஹெப்பாடிடிஸ் நோயினை அழித்தொழிக்க தேசிய அளவிலான திட்டம் ஒன்றினைத் தொடங்கியுள்ளது.

35. இந்தியாவின் முதலாவது வேளாண் வானிலை முன்னறிவிப்பு மையமானது (Agromet Forecast Centre) கர்நாடக மாநிலத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

36. இந்தியாவின் முதலாவது முழு குவிமாட முப்பரிமாண டிஜிட்டல் திரையரங்கமானது (Fulldome 3D Digital Theatre) கொல்கத்தாவில் தொடங்கப்பட்டுள்ளது.

37. மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகமானது இளம் பட்டதாரிகளுக்கு தொழில் சார்ந்த பயிற்சிகளை வழங்குவதற்காக உயர் கல்வியில் இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி மற்றும் திறனளிக்கும் திட்டத்தினை (Scheme for Higher Education Youth in Apprenticeship and Skills - SHREYAS) அறிமுகப்படுத்தியுள்ளது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## சர்வதேசம்

1. பாரத மாநில வங்கியின் ஐக்கிய இராஜ்ஜிய த் தலைவர் சஞ்சீவ் ச த்தா, இருதரப்பு உறவுகளை பலப்படுத்தியதற்காக இலண்டன் நகர்ப்புற மாநகராட்சியால் “இலண்டன் நகரின் சுதந்திரம் ” (Freedom of the City & London) என்று மரியாதையளித்துள்ளது.

2. சீனாவின் செய்தி வழங்கும் முகமையான சின்குவா (Xinhua), செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் இயங்கக் கூடிய சின் சியாமங் (Xin Xiaomeng) என்னும் உலகின் முதலாவது பெண் செய்தி வாசிப்பாளரை வடிவமைத்துள்ளது.

3. பிப்ரவரி 15, 2015 அன்று யு.எஸ். அதிபர் டொனால்ட் ட்ரம்ப் காங்கிரஸின் ஒப்புதலில்லாமல் அவசர நிலையை ஏற்படுத்தி யுஎஸ் - மெக்சிகோ எல்லைக்கான நிதி திரட்ட வேண்டும் என அறிவித்துள்ளார்.

4. சியாமிஸ் சண்டை யிடும் மீனி னை தாய்லாந்து அதன் தேசிய நீர் விலங்காக அறிவித்துள்ளது.

5. துபாய் விமான நிலையமானது உலகிலேயே போக்குவரத்து மிகுந்த விமான நிலையம் என்ற முதல் நிலையை தக்க வைத்துக் கொண்டது.

6. மாசிடோனியா தனது நாட்டின் பெயரை வடக்கு மாசிடோனியா என்று அதிகாரப்பூர்வமாக மாற்றியமைத்துக் கொண்டது.

7. சுல்தான் அப்துல்லா மலேசியாவின் புதிய அரசராகப் பதவி ஏற்றுள்ளார்.

8. அபுதாபியில் செயிண்ட் பிரான்சிஸ் என்ற தேவாலயமும் கிராண்ட் இமாம் என்ற மசூதியையும் யுஏஇ கட்டுவதற்கு திட்டமிட்டுள்ளது.

9. சிந்து நதி டால்பினை பஞ்சாப் அரசு அம்மாநில நீர் விலங்காக அறிவித்துள்ளது.

10. அபுதாபியானது அராபி மற்றும் ஆங்கிலத்திற்கு அடுத்ததாக இந்தி மொழியை மூன்றாவது அதிகாரப்பூர்வ மொழியாக அறிவித்துள்ளது.

11. இந்தியா, பாகிஸ்தானுக்கு அளித்த 'மிகவும் விருப்பமான நாடு' என்ற நிலையினை விலக்கிக் கொண்டுள்ளது.

12. நீர் மற்றும் நீர் மேலாண்மை முயற்சிகளுக்காக இந்தியா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் ஒன்றிணைந்துள்ளன.

13. 5-வது இந்தியா-வங்காளதேசம் கூட்டு ஆலோசனைக் குழுக் கூட்டம் புதுடெல்லியில் நடந்தது.

14. கடல்மாசுபாட்டை எதிர்கொள்வதற்காக இந்தியா-நார்வே ஆகியவை இணைந்து முயற்சி எடுத்துள்ளன.

15. சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டமைப்பில் (International Solar Alliance) 73-வது நாடாக சவுதி அரேபியா இணைந்துள்ளது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள்

| மாநாடு / கருத்தரங்குகள் | காரணம் / கருத்துரு / வெளியீடு | இடம் | நாள் |
|---|---|---|---|
| **ஐசிடி நிறுவன இணைப்பு 2019** | தொழிற்துறை 4.0 -க்காக இந்தியாவை தயார் செய்தல் | தமிழ்நாடு | 2019 பிப்ரவரி 5 |
| **PETROTECH - 2019** | சர்வதேச எண்ணெய் மற்றும் வாயு கருத்தரங்கு | கிரேட்டர் நொய்டா, உத்திரப்பிரதேசம் | 2019 பிப்ரவரி, 10 |
| **யுனானி மருத்துவத்திற்கான தேசிய கருத்தரங்கு** | இவ்விழாவில், யுனானி மருத்துவத்திற்கான ஆயுஷ் விருதுகள் வழங்கப்பட்டன. | புது டெல்லி | 2019 பிப்ரவரி 13 |
| **2வது ஆசிய எல்.பி.ஜி மாநாடு 2019** | கருத்துரு : எல்.பி.ஜி. - வாழ்க்கைக்கான ஆற்றல் | புது டெல்லி | பிப்ரவரி 2019, 5 முதல் 6 வரை |
| **பர்மனு டெக் 2019- அணுசக்தி ஆற்றல் மாநாடு** | சுற்றுச்சூழல் பொறுப்புடன் கூடிய இந்திய அணுசக்தி திறனை வெளிக்காட்டுவதே இம்மாநாட்டின் முக்கிய நோக்கம் | புது டெல்லி | 2019, பிப்ரவரி 7 |
| **முதல் LAWASIA மனித உரிமைகள் மாநாடு 2019** | கருத்து: "சக்தி, வர்த்தகம் மற்றும் மனித உரிமைகளை நிறுவுதல் : சமகால சவால்கள்" | புது டெல்லி | பிப்ரவரி 2019, 9 முதல் 10 வரை |
| **5வது சர்வதேச அணைகள் பாதுகாப்பு மாநாடு 2019** | | புவனேஸ்வர், ஒடிசா | பிப்ரவரி 2019, 14 முதல் 15 வரை |
| **7வது உலக அரசாங்க மாநாடு 2019** | எதிர்கால அரசுகளை வடிவமைப்பதே இம்மாநாட்டின் முக்கிய நோக்கமாகும். | துபாய், ஐக்கிய அரபு அமீரகம் | 2019, பிப்ரவரி 12 |

| | | | |
|---|---|---|---|
| **உலக நீடித்த வளர்ச்சி மாநாடு 2019** | கருத்துரு : "Attaining the 2030 Agenda : Delivering on our Promise". | புது தில்லி | 2019 பிப்ரவரி 11-13 |
| **நான்காவது இந்தியா - ஆசியான் (ASEAN) எக்ஸ்போ மற்றும் மாநாடு, 2019** | – | புது தில்லி | 2019 பிப்ரவரி 21-23 |
| **8வது உலக CSR மாநாடு 2019** | கருத்துரு : "Sustainable Development Goals (SDGs) 2019 : to focus on Corporate strategies, innovation, and strategic alliances." | மும்பை, மகாராஷ்டிரா | 2019 பிப்ரவரி, 17-18 |
| **எழுச்சியுறும் இந்தியா மாநாடு 2019 (Rising India Summit)** | கருத்துரு : "Beyond Politics : Defining National Priorities" | புது தில்லி | 2019 பிப்ரவரி, 22 |
| **நான்காவது வேளாண் தலைமைத்துவ மாநாடு 2019 (4th Agri Leadership summit 2019)** | கருத்துரு : "Entrepreneurship & Agri - - Business; Agri Allied - A promising sector and Agri service - Direct Marketing". | சோனிபட், ஹரியானா | 2019 பிப்ரவரி, 15-17 |

## *திட்டங்கள் / யோஜனாக்கள்*

| திட்டங்கள் | நோக்கம் / செய்திகளில் இடம் பெற்றதன் காரணம் | அமைச்சகம் / துறை | நாள் |
|---|---|---|---|
| **முக்கிய மந்திரி விரிதாஜன் ஓய்வூதியத் திட்டம்** | ஓய்வூதியத் திட்டம் | பீகார் அரசு | 2019, பிப்ரவரி 14 |
| **முக்கியமந்திரி யுவ ஸ்வபிமான் திட்டம்** | பொருளாதாரத்தில் பின்தங்கிய நகர்ப்புற இளைஞர்களுக்கான (21-30 வயது) திட்டம் | மத்தியப் பிரதேசம் | 2019, பிப்ரவரி 25 |
| **பிரதம மந்திரி ஸிரம் யோகி மாந்தன் ஓய்வூதியத் திட்டம்** | இத்திட்டத்தின்படி அமைப்பு சாரா நிறுவனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 60 வயதிற்குப் பிறகு மாதம் 3000 உறுதியான ஓய்வூதியம் வழங்கப்படும். | மத்திய அரசு | 2019, பிப்ரவரி 15 |
| **அருந்ததி திட்டம்** | மணப்பெண்களுக்கு இலவசமாக தங்கம் வழங்குதல் | அஸ்ஸாம் அரசு | 2019, பிப்ரவரி 7 |
| **காலிய சத்ரா புருட்டி திட்டம்** | தொழில் சார் மேல்படிப்பை படிப்பதற்கு | ஒடிசா அரசு | 2019, பிப்ரவரி 4 |

| | | | |
|---|---|---|---|
| | விவசாயிகளின் குழந்தைகளுக்கு இலவசமாக படிப்பதற்காக உதவித்தொகை வழங்கப்படுகிறது | | |
| **அன்னதாதா சுகிபவா திட்டம்** | விவசாயிகளுக்கான திட்டம் | ஆந்திரப் பிரதேசம் | 2019, பிப்ரவரி 19 |

## குறியீடுகள்

| குறியீடு | நோக்கம் / வெளியீடு | இந்திய தர வரிசை | முதல் இடம் |
|---|---|---|---|
| **உள்ளடக்கிய இணைய குறியீடு 2019 (Inclusive Internet Index)** | - | 47 | ஸ்வீடன் |
| **சர்வதேச ஐபி குறியீடு 2019 (International IP Index)** | உலக புத்தாக்க (Global Innovation Policy Centre) கொள்கை மையம் | 44 | அமெரிக்கா |

## செய்திகளில் வந்த பெண்கள்

| பெயர் | செய்திகளில் இடம் பெற்றதன் காரணம் |
|---|---|
| **ஹினா ஜெய்ஸ்வால்** | இந்திய விமானப்படையின் முதல் பெண் விமானப் பொறியியலாளர் |
| **பாவனா கஸ்தூரி** | குடியரசு தின அணிவகுப்பில் ஆண் இராணுவ வீரர்களை வழி நடத்திய முதலாவது பெண் |
| **சுமன் குமாரி** | பாகிஸ்தானின் உரிமையியல் நீதிபதியாகப் பதவியேற்ற முதல் இந்துப் பெண் |
| **மித்தாலி ராஜ்** | 200 ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபெற்ற முதல் இந்தியப் பெண் |

## பிப்ரவரி 2019ல் நடைபெற்ற இராணுவப் பயிற்சிகள்

| இராணுவப் பயிற்சியின் பெயர் | நாடுகள் | பயிற்சியின் வகை | இடம் | நாள் |
|---|---|---|---|---|
| **அமன் 19** | 46 நாடுகள் | பன்னாட்டு கடல் பயிற்சி | கராச்சி, பாகிஸ்தான் | 2019, பிப்ரவரி 10 |
| **பயிற்சி டாப்ச்சி 2019** | | இருதரப்பு இராணுவ வருடாந்திர பயிற்சிகள் | நாசிக், மகாராஷ்டிரம் | 2019, பிப்ரவரி 15 |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

| | | | | |
|---|---|---|---|---|
| **கட்லாஸ் எக்பிரஸ் 2019** | | பன்னாட்டு கடற்பயிற்சி | டிஜிபுடிக்கு அருகில் மொசாம்பிக் மற்றும் சீசெல்சு | 2019, ஜனவரி 27 முதல் பிப்ரவரி 6 வரை |
| **பயிற்சி ராகத்** | | கூட்டு மனிதாபிமான உதவி மற்றும் பேரழிவு நிவாரணப் பயிற்சி | ராஜஸ்தான் | 2019, பிப்ரவரி 11 முதல் பிப்ரவரி 12 வரை |
| **வாயு சக்தி** | - | இந்திய வான் படை | பொக்ரான், இராஜஸ்தான் | 2019, பிப்ரவரி 18 |
| **சம்பிரிதி 2019** | இந்தியா & வங்கதேசம் | - | தெங்காயில், (Tangail) வங்கதேசம் | 2019, மார்ச் (நடைபெற உள்ளது) |

## பிப்ரவரி 2019 ல் விண்ணில் செலுத்தப்பட்ட ராக்கெட்டுகள்

| செய்ற்கைக்கோள் | நாடு | செலுத்து வாகனம் | காரணம் | நாள் |
|---|---|---|---|---|
| **ஜிசாட் - 31 (இந்தியாவின் 40வது தொலைதொடர்பு)** | இந்தியா | ஏரியன் - 5 VA - 247 | புவிநிலைச் சுற்றுப்பாதையில் கேயு-பட்டை செலுத்து வாங்கியின் திறனை அதிகரித்தல் | 2019, பிப்ரவரி 6 |

## பாதுகாப்பு மற்றும் விண்வெளி

1. இஸ்ரோ மனித விண்வெளி விமான நிலையத்தை ககன்யான் திட்டத்திற்காக பெங்களூருவில் அமைத்துள்ளது.
2. “யுவ விக்யானி கார்யேக்ரம்” - இளம் விஞ்ஞானிகளுக்கான திட்டம் என்ற சிறப்புத் திட்டத்தினை பள்ளிக்குழந்தைகளுக்காக இஸ்ரோ ஆரம்பித்துள்ளது.
3. உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட உந்துவிசை தொழில்நுட்பத்திற்கான (திட எரிபொருள் குழாய் ராம்ஜெட் தொழில்நுட்பம்) சோதனையை இந்தியா வெற்றிகரமாக செய்து முடித்தது.
4. நாசாவின் முத லாவது சிறிய - விண்கலமான “மேக்ரோ க்யூப்சாட்ஸ் ” பூமியுடனான தகவலை இழந்தது.
5. இஸ்ரேல் நிலவுக்கான தனது முதல் விண்வெளித் திட்டமான Beresheet-ஐ செயல்படுத்த உள்ளது. ஆளில்லா விண்கலத் திட்டமான இது நிலவு தொடர்பான தரவுகளை சேகரித்து அதை நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்துடன் பகிர்ந்து கொள்ள உள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

1. **iAPS:** சர்க்கரை நோயாளிகளின் இரத்தச் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த iAPS என்ற செயற்கை கணைய கைபேசிச் செயலியை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

2. ஆயுர்வேதா, சித்தா, யுனானி மற்றும் ஹோமியோபதி மருந்துகளுக்கு இணையதளத்தில் உரிமம் வழங்குவதற்காக ஆயுஷ் அமைச்சகம் “இ-ஆவுஷாதி தளத்தை” தொடங்கி வைத்தார்.

3. பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (PM-JAY) கைபேசி செயலியானது தொடங்கப்பட்டுள்ளது.

4. ஆண்டு 2018, ஆனது 2015, 2016, 2017 ஆண்டுகளுக்குப் பிறகு நான்காவது வெப்பமான ஆண்டாகப் பதிவாகியுள்ளது.

5. இந்திய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையமானது, (IWAI) தேசிய நீர்வழிச் சாலைகளின் முழுமையான பயன்பாட்டினை அடையும் பொருட்டு LADIS (Least Available Depth) என்னும் இணையவாயிலை வடிவமைத்துள்ளது.

6. டீசலிலிருந்து மின் உற்பத்தி செய்யும் உலகின் முதலாவது இரயில் பெட்டியினை (Diesel to Electric conversion Locomotive) பிரதமர் மோடி வாரணாசியில் தொடங்கி வைத்தார்.

7. ஆஸ்திரேலியாவின் சிறிய பழுப்பு நிற எலியானது (Australian Small Brown Rat) பருவ நிலை மாற்றத்தால் அழிந்த உலகின் முதல் பாலூட்டி உயிரினமாகும்.

## பொருளாதாரம்

### 1. மத்திய இடைக்கால நிதிநிலை அறிக்கை 2019-20

- பட்ஜெட் கூட்டம் தொடங்கிய தினம்: 2019 ஜனவரி 31 - பாராளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் உரையாற்றினார்.
- பட்ஜெட் அறிவிக்கப்பட்ட நாள்: 2019 பிப்ரவரி 1
- பட்ஜெட் உரையை வாசித்தவர் : பியூஷ் கோயல், மத்திய நிதி அமைச்சர், பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம், இரயில்வே மற்றும் நிலக்கரி அமைச்சகம்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

- பட்ஜெட் கூட்டத் தொடர் நிறைவுற்ற தினம் : 2019 பிப்ரவரி 13.

**பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள்:**

| | |
|---|---|
| **பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதி திட்டம்** | **சிறு, குறு விவசாயிகளுக்கு நிலையான கூடுதல் தொகை வழங்குதல்.** |
| **பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மந்தன்** | அமைப்பு சாரா துறையில் பணிபுரிபவர்களுக்கு அவர்களின் முதிர்ச்சியுற்ற காலத்தில் சமூகப் பாதுகாப்பு அளித்தல். |
| **ராஷ்ட்ரிய காமதேனு ஆயோக்** | பசுக்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் |

2. இந்திய சுற்றுலாத் துறையானது 2018-ஆம் ஆண்டில் 19% வளர்ச்சியை எட்டியுள்ளது.

3. 2018-19 ஆண்டுக்கான சாவரின் தங்கப் பத்திரங்கள் திட்டம் 2019 பிப்ரவரி 4 முதல் பிப்ரவரி 8 வரை வழங்கப்பட்டது.

4. 2018-19 -ம் ஆண்டின் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வெளியிடப்படும் மத்திய ரிசர்வ் வங்கியின் பணக் கொள்கையின் படி ரெப்போ விகிதம் 25 புள்ளிகள் குறைந்து 6.25% ஆக இருந்தது.

| | |
|---|---|
| **மறுகொள் முதல் வீதம் (Repo Rate)** | **6.25%** |
| **நேர் மாற்று மறுகொள் முதல் வீதம் (Reverse Repo Rate)** | 6.0% |
| **விளிம்புநிலை வசதி (Marginal Standing Facility Rate)** | 6.50% |
| **வங்கி விகிதம் (Bank Rate)** | 6.50% |

5. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான கிசான் சுவிதா கடனானது உஜ்ஜீவன் சிறு நிதி வங்கியால் வழங்கப்படுகிறது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## *விருதுகள்*

| **விருதுகள் / பரிசுகள்** | **நபர் / நிறுவனம்** |
|---|---|
| **பிரான்சின் மிக உயரிய லீஜியன் ஆஃப் ஹானர் விருது** | பிரான்கோய்ஸ் லபோர்டே |
| **கனடா அகாடமி வழங்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது** | தீபா மேத்தா |
| **இஸ்ரேலின் டான் டேவிட் விருது 2019** | இந்திய வரலாற்று ஆய்வாளர் சஞ்சய் சுப்ரமண்யம். |

| | |
|---|---|
| **ஸ்வச்சதா விருதுகள் 2019 (Swachhata Excellence Awards 2019)** | ராய்கார், சத்தீஸ்கர் - முதலாம் இடம் |
| | அம்பிகாபூர், சத்தீஸ்கர் - இரண்டாவது இடம் |
| | கும்பகோணம், தமிழ்நாடு - மூன்றாவது இடம் |
| **சர்வதேச மனித உரிமைகள் விருது** | அப்துல் அஜிஸ் முகம்மது |
| **தாகூர் விருது** | 2014 - ராஜ்குமார் சிங்காஜித் சிங் |
| | 2015 - சஹாயானத் (Chhayanaut) |
| | 2016 - ராம் வஞ்சி சுடர் |
| **91வது அகாடமி விருதுகள் (ஆஸ்கர் விருதுகள்)** | |
| **சிறந்த திரைப்படம்** | Green Book |
| **சிறந்த நடிகர்** | Rani Malek, Boheimian Rhapsody |
| **சிறந்த நடிகை** | Oliva Colman |
| **சிறந்த ஆடை வடிவமைப்பாளர்கள்** | Black Panther, Ruth Carter |
| **சிறந்த அயல்நாட்டு திரைப்படம்** | Roma Mexico, Alfonso Cuar |
| **சிறந்த இயங்குரு திரைப்படம்** | Spider Man : Into the Spider-verse |

## *நியமனங்கள் மற்றும் ஆளுமைகள்*

| ஆளுமைகள் | பொறுப்பு / பதவி |
|---|---|
| **ரிஷி குமார் சுக்லா** | சி.பி.ஐ. இயக்குனர் |
| **சுஷில் சந்திரா** | புதிய தேர்தல் ஆணையர் |
| **லெப்டினன்ட் ஜெனரல் ராஜீவ் சோப்ரா** | NCC -ன் இயக்குநர் ஜெனரல் |
| **பி.வி. பாரதி** | கார்ப்பரேஷன் வங்கியின் முதன்மை நிர்வாக அதிகாரி |
| **எகிப்தின் அதிபர் எல். சிசி** | ஆப்பிரிக்க ஒன்றியத்தின் புதிய தலைவர் |
| **பிரதீப் சிங் கரோலா** | சிவில் விமானப் போக்குவரத்து துறையின் புதிய செயலர் |
| **அஷ்வின் லோகானி** | ஏர் இந்தியாவின் தலைவர் மற்றம் மேலாண்மை இயக்குநர் |
| **சஞ்சீவ் ரஞ்ஜன்** | கொலம்பியா நாட்டுக்கான இந்திய தூதர் |
| **தினேஷ் பாட்டியா** | அர்ஜென்டினா நாட்டுக்கான இந்திய தூதர் |
| **பிரமோத் சந்திர மோடி** | நேரடி வரிகளுக்கான மத்திய வாரியத்தின் (CBDT) தலைவர் |

## *விளையாட்டு*

1. பெண்களுக்கான ஒரு நாள் போட்டிகளுக்கான பேட்டிங் தரவரிசையில் ஸ்மிரிதி மந்தனா முதலிடத்தைப் பிடித்துள்ளார். (2018-ம் ஆண்டுக்கான ICC-ன் சிறந்த பெண் கிரிக்கெட் வீரராகவும் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்)
2. பெண்கள் டி 20 கிரிக்கெட் போட்டிகளில் அதிவேக அரைசதம் அடித்த சாதனையை ஸ்மிரித் மந்தனா நிகழ்த்தியுள்ளார். அவர் இச்சாதனையை 24 பந்துகளில் செய்துள்ளார்.
3. அபுதாபியில் நடைபெற்ற ஆசிய கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டிகள் 2019-ல் ஜப்பானுக்கு எதிரான ஆட்டத்தில் கத்தார் நாடு வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது.
4. வாணி கபூர் ஆஸ்திரேலியாவின் பெண்கள் PGA கார்டினைப் (Australian Women) பெறும் முதலாவது இந்திய கோல்ஃப் வீரராவார்.
5. கால்பந்து ரத்னா விருதானது முதல் முறையாக சுனில் சேத்ரிக்கு (Captain Fantastic) வழங்கப்பட்டுள்ளது.
6. விதர்பா அணியானது தொடர்ந்து இரண்டாவது முறையாக ரஞ்சிக் கோப்பையை (2018) வென்றுள்ளது. நாக்பூரில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் சௌராஷ்டிரா அணியை வென்று விதர்பா இச்சாதனையைச் செய்துள்ளது.
7. தாய்லாந்தில் நடைபெற்ற EGAT கோப்பையில் "மீராபாய் சானு" தங்கம் வென்றுள்ளார்.
8. டி20 கிரிக்கெட் போட்டிகளில் அதிக ரன்களைக் குவித்த வீரர் என்ற சாதனையை ரோகித் சர்மா நிகழ்த்தியுள்ளார்.
9. 'சியாட்டில் ஸ்குவாஷ் ஓபன்' போட்டியில் 'ரமித் டாண்டன்' சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
10. 2019-ம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியின் துணைப் பயிற்சியாளராக ரிக்கி பாண்டிங் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
11. ஐ.பி.எல். போட்டிகளில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் நல்லெண்ண தூதுவராக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வார்னே நியமிக்கப்பட்டுள்ளார்.
12. தேசிய விளையாட்டு போட்டிகள் 2022-ன் சின்னமாக மேகச் சிறுத்தை (Clouded Leopard) அறிவிக்கப்பட்டுள்ளது.

13. கொச்சி பகுதியின் படகுப் போட்டி 2019-ல் (Kochi Area Boat Pulling Regatta 2019) ஐ.என்.எஸ். துரோணாச்சார்யா வெற்றி வாகை சூடியுள்ளது.

14. நான்காவது புரோ குத்துச்சண்டை லீக் போட்டிகளில் (Pro Wrestling League - PWL) பஞ்சாபை வீழ்த்த ஹரியானா ஹாம்மர்ஸ் அணி சாம்பியன் பட்டம் வென்றது.

## திருவிழாக்கள்

1. **கைவினைப் பெருட்கள் மேளா:** 33வது சூரஜ்குண்ட் சர்வதேச கைவினைப் பொருட்கள் மேளாவானது ஹரியானாவின் ஃபரிதாபாத்தில் நடை பெற்றது.

2. **காலா கோடா கலைத் திருவிழா** : இந்தியாவின் மிகப்பெரிய பன்மைக் கலாச்சார வீதித் திருவிழாவான "காலா கோடா கலைத் திருவிழா" (Kala Ghoda Arts Festival) மும்பையில் நடைபெற்றது.

3. **பூரி பூட் யோல்லோ விழா** : அருணாச்சலப் பிரதேசத்தின் நிஷி பழங்குடியினர் "பூரி பூட் யோல்லோ விழாவை (Boori Boot Yollo Festival) கொண்டாடினர்.

4. **சல்லச்சித்திரம் தேசிய திரைப்பட விழா** : சல்லச்சித்திரம் தேசிய திரைப்பட விழாவானது (Challachitram National Film Festival) 2019 மார்ச் மாதம் குவஹாத்தியில் நடைபெற உள்ளது.

5. **40வது சர்வதேச வருடாந்திர பாலைவனத் திருவிழாவானது** (International Annual Desert Festival) **இராஜஸ்தானின், ஜெய்சால்மரில் நடைபெற்றது.**

## புத்தகங்கள் மற்றும் ஆசிரியர்கள்

| புத்தகங்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| **Let's Talk on Air: Conversations with Radio presenters** | ராகேஷ் ஆனந்த் பக்சி |
| **Undaunted: Saving the Idea of India** | ப. சிதம்பரம் (முன்னாள் மத்திய நிதியமைச்சர்) |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

| | |
|---|---|
| **What Marx Left Unsaid** | டாக்டர் மலாய் சவுத்ரி, டாக்டர். அரிந்தம் சவுத்ரி மற்றும் சேகபிர் சவுத்ரி |
| **Law, Justice and Judicial Power - Justice P N Bhagawati's Approach** | மூல் சந்த் சர்மா |
| **Selected Speeches : Volume - I** | வெங்கய்யா நாயுடு |
| **Simplicity Wisdom** | தினேஷ் சஹ்ரா |

## முக்கிய நாட்கள்

| நாட்கள் | நிகழ்வுகள் | கருத்துரு / முக்கியத்துவம் |
|---|---|---|
| பிப்ரவரி 2 | எட்டாவது பழவேற்காடு தினம் | காயல் நிலப்பகுதிகளைப் (Lagoons) பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்துதல். |
| | சர்வதேச ஈர நிலங்கள் தினம் | கருத்துரு : "Wet lands and Climate Change" |
| பிப்ரவரி 4 | உலக புற்றுநோய் தினம் | "I am and I will" |
| | இலங்கையின் 71-வது சுதந்திர தினம் | சிறப்பு விருந்தினர்: மாலத்தீவுகளின் அதிபர் இப்ராகிம் முகம்மது சோலிஹ் |
| பிப்ரவரி 6 | பெண்களின் பிறப்புறுப்பை சிதைத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் (International Day of Zero Tolerance for Female Genital Multination) | |
| பிப்ரவரி 8 | தேசிய குடற்புழு நீக்க தினம் (National Deworming Day) | |
| பிப்ரவரி 10 | உலக பயிறு வகைகளுக்கான தினம் (World Pulses Day) | |
| பிப்ரவரி 11 | அறிவியல் துறையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆர்வத்தை வளர்ப்பதற்கான சர்வதேச தினம். | கருத்துரு : "Investment in women and Girls in Science for Inclusive Green Growth" |
| | யுனானி தினம் 2019 | |
| பிப்ரவரி 12 | தேசிய உற்பத்தித்திறன் தினம் | கருத்துரு : "Circular Economy for Productivity and sustainability" |

SHANKAR IAS ACADEMY
CURRENT AFFAIRS

| | | |
|---|---|---|
| **பிப்ரவரி 13** | உலக வானொலி தினம் | கருத்துரு : (Theme) “பேச்சுவார்த்தை, சகிப்புத்தன்மை மற்றும் அமைதி” (Dialogue, Tolerance and Peace) |
| **பிப்ரவரி 20** | உலக சமூக நீதி தினம் | கருத்துரு : “If you want peace Development, work for social justice” |
| **பிப்ரவரி 21** | சர்வதேச தாய்மொழி தினம் | கருத்துரு : ”வளர்ச்சி, அமைதி மற்றும் சமசர முயற்சிகளில் உள்நாட்டு மொழிகள்” |
| **பிப்ரவரி 28** | தேசிய அறிவியல் தினம் | கருத்துரு : “மக்களுக்கான அறிவியல் மற்றும் அறிவியலுக்காக மக்கள்” |

1. தேசிய உற்பத்தித்திறன் குழுவானது 2019 பிப்ரவரி 12 முதல் 18 வரையிலான வாரத்தை தேசிய உற்பத்தித்திறன் வாரமாக (National Productivity Week) அனுசரிக்கிறது. இதன் கருத்துரு: "Circular Economy for Productivity and Sustainability"

2. பிப்ரவரி 4 (திங்கள்) முதல் பிப்ரவரி 10 (ஞாயிறு) வரையிலான வாரமானது 30வது சாலைப் பாதுகாப்பு வாரமாகக் கொண்டாடப்பட்டது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS